
## மழை வேண்டி தொழுகை!



மழை வேண்டி சென்னை திருவல்லிக்கேணி கிருஷ்ணாம் பேட்டையில் உள்ள ஃபக்கீர் லெப்பை ஜமாஅத் பள்ளிவாசலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சிறப்புத் தொழுகை.

# வேளச்சேரியில் ஆக்கிரமிப்பு கட்டடங்கள் இடிப்பு: ஆட்சியர் ஆய்வு

**சென்னை, ஜூன் 23:** சென்னை வேளச்சேரியில் ரயில்வே துறைக்குச் சொந்தமான நிலத்தைஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த வீடுகள், கடைகளை இடித்து அகற்றும் பணிகளை மாவட்ட ஆட்சியர் அ.சண்முகசுந்தரம் ஞாயிற்றுக்கிழமை நேரில் ஆய்வு செய்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் அடையாறு மண்டலத்துக்கு உள்பட்ட பகுதியில் அமைந்துள்ளது வேளச்சேரி ரயில் நிலையம். இந்த ரயில் நிலையத்துக்கு அருகே ரயில்வே துறைக்குச் சொந்தமான 2.50 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலத்தை தனியார் சிலர் ஆக்கிரமித்து கடைகள் மற்றும் வீடுகளைக் கட்டினர். இதைக் காலி செய்யுமாறு கடந்த 18 ஆண்டுகளுக்கு முன்பு ஆக்கிரமிப்பாளர்களுக்கு ரயில்வே நிர்வாகம் நோட்டீஸ் அனுப்பியது.



வேளச்சேரியில் ரயில்வே துறைக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டிருந்த ஆக்கிரமிப்பு கட்டடங்களை அகற்றும் பணியை ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்த சென்னை மாவட்ட ஆட்சியர் அ.சண்முகசுந்தரம்.

ஆனால், அவர்கள் காலி செய்ய மறுப்புத் தெரிவித்தனர். இது தொடர்பான வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் ஆக்கிரமிப்புக் கட்டடங்களை காலி செய்யுமாறு உத்தரவிட்டது. இதை எதிர்த்து அப்பகுதி மக்கள் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவையே உச்சநீதிமன்றமும் உறுதி செய்து அண்மையில் உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து, அந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள ஆக்கிரமிப்புக் கட்டடங்களை அகற்றும் பணி கடந்த செவ்வாய்க்கிழமை (ஜூன் 18) தொடங்கப்பட்டது. 400-க்கும் மேற்பட்ட கடைகள், வணிக நிறுவனங்களை இடிக்கும் பணி கடந்த 4 நாள்களுக்கும் மேலாக நடைபெற்று வருகிறது. இப்பணியை மாவட்ட ஆட்சியர் அ.சண்முகசுந்தரம் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார். அப்போது, பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படாமல் பணிகளை முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

# மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை முறையாகப் பராமரிக்காதவர்கள் மீது நடவடிக்கை

## மாநகராட்சி ஆணையர் எச்சரிக்கை

**சென்னை, ஜூன் 23:** சென்னையில் உள்ள கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை முறையாகப் பராமரிக்காதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாநகராட்சி ஆணையர் ஜி.பிரகாஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் அடையாறு மண்டலம், ரஞ்சித் சாலையிலுள்ள குடியிருப்புகள், வணிகக் கட்டடங்கள் உள்ளிட்டவற்றில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் குறித்து ஆணையர் ஜி.பிரகாஷ் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு மேற்கொண்டு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களுக்கு அவர் வழங்கினார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: சென்னை மாநகராட்சிப் பகுதிகளுக்கு உள்பட்ட வீடுகள், கட்டடங்கள், தொழில் நிறுவனங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வின்போது, மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பை முறையாகப் பராமரிப்பது குறித்து பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை முறையாகப் பராமரிக்காதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னர் முதல் கட்டமாக ஒரு வார்டுக்கு 1,000 வீடுகள் வீதம் சுமார் 2 லட்சம் வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். சென்னை மாநகராட்சியும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமும் இணைந்து மழைநீர் சேகரிப்பது குறித்த 10 லட்சம் பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்க உள்ளன என்றார்.

# மானியத்தை விட்டுக் கொடுக்கும் திட்டம்: ஆக.31-க்குள் அமல்படுத்த ரயில்வே முடிவு

**சென்னை, ஜூன் 23:** ரயில் பயணச்சீட்டுக்காக மானியத்தை விட்டு கொடுக்கும் திட்டத்தை அமல்படுத்துவதற்கு ஆகஸ்ட் 31-ஆம் தேதி தெற்கு ரயில்வே காலக்கெடு நிர்ணயித்துள்ளது. அதேநேரத்தில், மானியம் இல்லாத கட்டணம் வழக்கமான கட்டணத்தைவிட 47 சதவீதம் அதிகமாக இருக்கும்.

ரயில் நிலையத்தில் வை-பை வசதி ஏற்படுத்துதல், தனியாக ரயில் இயக்குதல் உள்பட 20-க்கும் மேற்பட்ட திட்டங்களை 100 நாள்களில் செயல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்த 100 நாள் திட்டத்தின் ஒரு பகுதியாக, ரயில் பயணச்சீட்டுகள் மீதான சலுகையை விட்டுக் கொடுக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்த ரயில்வே அமைச்சகம் சில நாள்களுக்கு முன்பு முடிவு செய்தது. இந்தத் திட்டத்தை ஆகஸ்ட் 31-ஆம் தேதிக்கு முன்னதாக அறிமுகப்படுத்த தெற்கு ரயில்வே முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக சென்னை, மதுரை, திருச்சி, சேலம், திருவனந்தபுரம், பாலக்காடு ஆகிய 6 கோட்ட அதிகாரிகளுக்கு தலைமை வணிக மேலாளர்( பயணிகள் முன்பதிவு முறை) கே.சங்கரசுப்பிரமணியன் வெள்ளிக்கிழமை ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளார். அலுவலக பதிவேட்டின்படி, பயணிகள் போக்குவரத்தில் ஏற்படும் வழக்கமான செலவில் 53 சதவீதம் திரும்ப கிடைக்கிறது. மானியம் இல்லாத பயணச்சீட்டின் கட்டணம் 47 சதவீதம் அதிகமாக இருக்கும்.

இதுகுறித்து ரயில்வே அதிகாரி ஒருவர் கூறியது: சென்னை-மதுரை இடையே தூங்கும் வசதி அடிப்படை கட்டணம் ரூ.265. இதன் முழு கட்டணம் சுமார் ரூ.380-ரூ.390 இருக்கலாம். சென்னை - காட்பாடி இடையே அதிவிரைவு ரயில்களில் முன்பதிவில்லாத கட்டணம் ஒரு பயணச்சீட்டுக்கு சுமார் ரூ.35 அதிகரிக்கும். எல்லா ரயில் நிலையங்களில் மானியம் இல்லாத கட்டணப் பட்டியல் வைக்கப்படும். மானியத்தை விட்டுக்கொடுக்கும் திட்டம் தொடர்பாக ரயில்களின் உள்புறம், ரயில் நிலையங்கள், சமூக ஊடகம், அச்சு, காட்சி ஊடகம் மூலமாக மிகப் பெரிய அளவில் விழிப்புணர்வு பிரசாரத்துக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. ரயில் டிக்கெட் மானியத்தைத் திரும்ப கொடுக்கும் பிரசாரத்தை தொடங்க ரயில்வே வாரியம் முடிவு செய்துள்ளது. ரயில்வே நிர்வாகம் ஆண்டு பயணச்சீட்டு வருவாயை 5 முதல் 10 சதவீதம் வரை உயர்த்த இலக்கு வைத்துள்ளது. மானியம் இல்லாத பயணச்சீட்டு பதிவு விருப்பத்தை செயல்படுத்துவதற்கு ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளத்தை மேம்படுத்துவதில் ரயில்வே நிர்வாகம் ஈடுபட்டுள்ளது என்றார் அவர்.

மூத்த குடிமக்களுக்காக மானியத்தை விட்டுக் கொடுக்கும் திட்டம் 2016-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பயணச்சீட்டு கவுன்ட்டர், இணையவழி மூலமாக பயணச்சீட்டைப் பதிவு செய்யும் போது, முழு மானியம் அல்லது 50 சதவீதம் மேல் விட்டு கொடுப்பதற்கு ஒரு விருப்பம் கொடுக்கப்பட்டது. இந்த முயற்சி முன்னோடியாக இருந்தது. ரயில்வேயில் அதிகாரப்பூர்வ ஆவணத்தின்படி, நாடு முழுவதும் ரயில்களில் 2018-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நிகழாண்டில் மார்ச் வரை 843 கோடி பேர் பயணித்தனர். இதன் மூலம், ரயில்வேக்கு ரூ.51,000 கோடி வருவாய் கிடைத்தது. இருப்பினும் , 2013-14-ஆம் ஆண்டில் ரயில்வேக்கு பயணிகள் வருவாய் ரூ.36,532 கோடியாக இருந்தது. அப்போது, 842 கோடி பேர் பயணம் மேற்கொண்டனர். ரயில் பயணிகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வகையில் உயராதபோது, கடந்த 4 ஆண்டுகளில் ரயில்வே வருவாய் ரூ.14,500 கோடி உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி புதிய முதல்வர் பொறுப்பேற்பு

**சென்னை, ஜூன் 23:** ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் புதிய முதல்வராக டாக்டர் சாந்தி மலர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர்ஞாயிற்றுக்கிழமை அப்பொறுப்பினை ஏற்றுக் கொண்டார்.



சாந்தி மலர்

மயக்கவியல் மருத்துவ நிபுணரான அவர் ஏற்கெனவே தருமபுரி, சென்னை ஓமந்தூரார், சிவகங்கை, வேலூர் மருத்துவக் கல்லூரிகளின் முதல்வராகப் பொறுப்பு வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சென்னை, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் முதல்வராக இருந்த எஸ்.பொன்னம்பல நமசிவாயம் கடந்த மாதம் 31-ஆம் தேதி ஓய்வு பெற்றார்.

இதையடுத்து மருத்துவமனையின் மருத்துவக் கண்காணிப்பாளரான டாக்டர் தனசேகர் அப்பொறுப்பை கூடுதலாகக் கவனித்து வந்தார். இந்த நிலையில் மருத்துவமனையின் புதிய முதல்வராக டாக்டர் சாந்தி மலரை அரசு நியமித்துள்ளது. சென்னை மருத்துவக் கல்லூரியில் (எம்எம்சி) எம்பிபிஎஸ் பயின்ற அவர், அதைத் தொடர்ந்து எம்.டி. (மயக்கவியல்) படிப்பை நிறைவு செய்தவராவார்.

சேலம், வேலூர், சென்னை மருத்துவக் கல்லூரிகளில் மயக்கவியல் துறை பேராசிரியராகவும் சாந்தி மலர் பணியாற்றியுள்ளார்.

# தீபாவளி : ரயில் பயண முன்பதிவு இன்று தொடக்கம்

**சென்னை, ஜூன் 23:** நிகழாண்டில் தீபாவளி பண்டிகை அக்டோபர் 27-ஆம் தேதி கொண்டாடப்படவுள்ள நிலையில், அக்டோபர் 22-ஆம் தேதிக்கான பயண சீட்டு முன்பதிவு திங்கள்கிழமை (ஜூன் 24) நடைபெறவுள்ளது.

சென்னையில் வேலை, தொழில், வியாபாரம், படிப்பு போன்ற காரணங்களால் வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த பலர் வசித்து வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் கோயில் திருவிழா மற்றும் பண்டிகைக் காலங்களில் சொந்த ஊர்களுக்கு செல்வது வழக்கம். அதிலும், தீபாவளி, பொங்கல், புத்தாண்டு, கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைக் காலங்களில் ரயில் மற்றும் பேருந்துகளில் கூட்டம் அலைமோதும்.

நிகழாண்டில் தீபாவளி பண்டிகை அக்டோபர் 27-ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) கொண்டாடப்படுகிறது. தீபாவளி பண்டிகைக்கு டிக்கெட் முன்பதிவு ஓரிரு நாளில் விறுவிறுப்படையவுள்ளது. ரயில்வேயில் டிக்கெட் முன்பதிவு 120 நாள்களுக்கு முன்னரே பதிவு செய்யும் முறை உள்ளது. அதன்படி, அக்டோபர் 22-ஆம் தேதி பயணம் செய்வதற்கான முன்பதிவு திங்கள்கிழமை (ஜூன் 24) காலை 8 மணிக்கு தொடங்குகிறது. அக்டோபர் 23-ஆம் தேதி பயணம் செய்ய முன்பதிவுக்கு ஜூன் 25-ஆம் தேதியும், அக்டோபர் 24-ஆம் தேதிக்கு பயண சீட்டு எடுக்க ஜூன் 26-ஆம் தேதியும், அக்டோபர் 25-ஆம் தேதி பயணம் செய்ய முன்பதிவுக்கு ஜூன் 27-ஆம் தேதியும், அக்டோபர் 26-ஆம் தேதி பயணம் செய்ய ஜூன் 28-ஆம் தேதியும் முன்பதிவு நடைபெறுகிறது.




உடனடிச் செய்திகள்
சூடாக சுருக்கமாக...
www.dinamani.com

**இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை**

டெண்டர் அறிவிப்பு எண். MFPL/169/4000000339/19-20, தேதி 24.06.2019

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் சார்பாக, தலைமைப் பணிமனைப் பொறியாளர், ஃபர்னிஷிங் கோட்டம், இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, சென்னை 600 038 அவர்கள் கீழ்க்கண்ட பணிகளுக்காக E-டெண்டர்களை வரவேற்கிறார்.

(1) பணி விவரம் : ரயில்வே பயணிகள் பெட்டிகளில் அலுமினிய கலப்பு பேனல்கள் மற்றும் மோல்டிங்குகள் நிறுவுவதற்கான பணிகள் ஒப்பந்தம் (2) அளவு : 13,000 சதுர மீட்டர் (3) மதிப்பு : ₹ 56,18,080/- (4) டேவணித் தொகை : ₹ 1,12,400/- (5) டெண்டர் ஆவணக் கட்டணம் : ₹ 5,000/- (திருப்பியளிப்பதல்ல) (6) முடிக்கும் காலம் : 31.03.2020 (7) டெண்டர் மூடும் தேதி மற்றும் நேரம் : 15.07.2019 பிற்பகல் 2.45 மணி

குறிப்பீடுகளைச் சமர்ப்பிப்பதற்கான இணையதளம் : www.ireps.gov.in

எந்தவொரு விளக்கத்திற்கும் செயல் திட்டப் பொறியாளர்-II, ICF அவர்களைத் தொடர்பு கொள்ளலாம் (தொலைபேசி எண்.: 044-26146406, 26146450).

துணைத் தலைமை மெக்கானிக்கல் பொறியாளர்/ஃபர்-I

பசுமையான ஐசிஎஃப் ! தூய்மையான ஐசிஎஃப் !

**இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை**

இந்திய ரயில்வே

டெண்டர் அறிவிப்பு எண். PLANT-S-AMC-GAS-2019

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் சார்பாக, துணைத் தலைமை மெக்கானிக்கல் பொறியாளர்/பிளான்ட், இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, சென்னை-38 அவர்கள், கீழ்க்கண்ட பணிக்காக, பிரபல ஒப்பந்ததாரர்களிடமிருந்து e-டெண்டர்களை வரவேற்கிறார் :

| | |
|---|---|
| பணியின் பெயர் | ஐசிஎஃப் ஷெல் பிரிவில் பயன்பாட்டு எரிவாயு விநியோக பாதைகள், மேனிஃபோல்டுகள் மற்றும் சேமிப்பு அமைப்புகளை இரண்டு வருட காலத்திற்கு பராமரிப்பதற்கான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம். |
| ஒப்பந்தக் காலம் | இரண்டு ஆண்டுகள் |
| டெண்டர் மதிப்பு (GST உட்பட) | ரூ. 35,57,210/-, 18% GST உட்பட |
| டெண்டர் ஆவண விலை | ரூ. 3,000/- (திருப்பியளிப்பதல்ல) |
| டேவணித் தொகை | ரூ. 71,100/- |
| e-டெண்டர் சமர்ப்பிக்கும் கடைசி தேதி மற்றும் நேரம் | 12.07.2019 பிற்பகல் 2.30 மணி வரை |

குறிப்பீடு சமர்ப்பிக்கும் இணையதளம் : www.ireps.gov.in

இணையதளத்தில் எந்தவொரு மாற்றம் அல்லது திருத்தம் வழங்கப்பட்டுள்ளதா என்பதை அவ்வப்போது கண்காணிக்குமாறு டெண்டர்தாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். டெண்டர் பெறும் மற்றும் திறக்கும் தேதி விடுமுறை தினமாக பின்னர் அறிவிக்கப்பட்டால், அவை அடுத்த முழு வேலை நாளில் பெறப்பட்டு திறக்கப்படும்.

பசுமையான ஐசிஎஃப் ! தூய்மையான ஐசிஎஃப் !

**ஆவின் திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், திருநெல்வேலி**

இ மெயில் : aavintny@gmail.com போன் : 0462-2552004 பேக்ஸ்: 0462 - 2552569

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

பொது மேலாளர், திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், திருநெல்வேலி அவர்களால் தாது உப்புக் கலவை தயாரிப்பிற்கான மூலப்பொருட்கள் வழங்குதல் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் (Two Cover System) வரவேற்கப்படுகிறது. ந.க.எண். 3167/Pur1/2018.

ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை ரூ. 500/- நேரில் ரூ. 600/- தபால் மூலம் பெற, முன் பிணை வைப்புத் தொகை ஒப்பந்த மதிப்பில் 1% (கேட்பு வரைவோலை மூலம் The General Manager, TDCMPU Ltd., Tirunelveli - 627 007.

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளிக்கான படிவம் விநியோகிக்கும் நாள் | 26.06.2019 முதல் 11.07.2019 அனைத்து அலுவலக நாட்களிலும் காலை 11.00 மணி முதல் பிற்பகல் 05.00 மணி வரை |
| மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் / நேரம் | 12.07.2019 பிற்பகல் 02.00 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி படிவம் திறக்கப்படும் நாள்/நேரம் | 12.07.2019 பிற்பகல் 03.00 மணியளவில் திருநெல்வேலி பால் பண்ணை வளாகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ மறுக்கவோ மாற்றியமைக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஒன்றிய பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு (For downloading tender forms refer website www.tenders.tn.gov.in. (for Downloading tender forms at free of cost and specification, quantity and EMD refer website).

செ.ம.தொ.இ./2103 /ஒப்பந்தப்புள்ளி/2019 பொது மேலாளர்

வெள்ளிதோறும் தினமணியுடன்... வெள்ளி மணி

**படிவம் A**

**பொது அறிவிப்பு**

(நொடிப்பு மற்றும் திவால் இந்திய வாரியம் கீழ் (கார்ப்பரேட் நிறுவனத்துக்காக நொடிப்பு தீர்வு காணல் செயல்முறை) ஒழுங்குமுறைகள், 2016 ஒழுங்குமுறை 6ன் கீழ்)

**ஜெட் ஏர்வேஸ் (இந்தியா) லிமிட்டெட்டின் கடன்தாரர்களின் கவனத்திற்காக**

| பொருத்தமான விவரங்கள் | | |
|---|---|---|
| 1. | கார்ப்பரேட் கடன்தாரர் பெயர் | ஜெட் ஏர்வேஸ் (இந்தியா) லிமிட்டெட் |
| 2. | கார்ப்பரேட் கடன்தாரர் இணைவு தேதி | 01 ஏப்ரல் 1992 |
| 3. | கார்ப்பரேட் கடன்தாரர் இணைந்துக் கொண்ட / பதிவு செய்த அதிகார அமைப்பு | பெருநிறுவன விவகார அமைச்சகம், ROC-மும்பை. |
| 4. | கார்ப்பரேட் அடையாள எண். / கார்ப்பரேட் கடன்தாரரின் வரை யறுக்கப்பட்ட கடன் பொறுப்புக்கான அடையாள எண். | L99999MH1992PLC066213 |
| 5. | கார்ப்பரேட் கடன்தாரரின் பதிவு அலுவலகத்தின் மற்றும் தலைமை அலுவலகம் (ஏதுமிருந்தால்) முகவரி | சிரோயா சென்டர், சாஹர் விமான நிலைய சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை – 400099. |
| 6. | கார்ப்பரேட் கடன்தாரர் தொடர்பானதில் நொடிப்பு நிலையின் ஆரம்ப தேதி | 20 ஜூன், 2019 |
| 7. | நொடிப்பு தீர்வு செயல்முறையின் முடிப்புக்கான உத்தேசத் தேதி | 16 டிசம்பர், 2019 (180 நாட்கள்) |
| 8. | இடைக்கால தீர்வுகாணும் தொழில்முறையாளராகச் செயல்படும் நொடிப்பு நிலை பணித்துறையாளரின் பெயரும் பதிவு எண்ணும் | ஆஷிஷ் சாவ்ச்சாரியா பதிவு எண். IBBI/IPA001/IP-P00294/2017-18/10538 |
| 9. | வாரியத்தில் பதிவு செய்தபடி இடைக்கால தீர்வு காணும் பணித்துறையாளரின் முகவரியும் மின்னஞ்சலும் | முகவரி : கிராண்ட் தோர்ன்டன் 10C ஹங்கர்போர்டு தெரு, கல்கத்தா – 700017. E: ashis.chhawchharia@in.gt.com |
| 10. | இடைக்கால தீர்வு காண்பவரைத் தொடர்பு கொள்வதற்குப் பயன்படுத்தும் முகவரி மற்றும் மின்னஞ்சல் | கோரல்களை சமர்ப்பிக்க: ஆஷிஷ் சாவ்ச்சாரியா, ஜெட் ஏர்வேஸ் (இந்தியா) லிமிட்டெட், சிரோயா சென்டர், சாஹர் விமான நிலைய சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை – 400099 E: rp.jetairways@in.gt.com |
| 11. | கோரல்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் தேதி | 4 ஜூலை, 2019 |
| 12. | பிரிவு 21-ன் துணைப்பிரிவு (6A)-ன் சட்ட விதிக் கூறு (b)-ன் கீழ் இடைக்கால தீர்வு காண்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட கடன் தருபவர் (எவரேனும் இருப்பின் அவரின் வகுப்பு) | பொருந்தாது |
| 13. | கடன்தருபவரின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியாக செயல்படுவதற்கு அடையாளங் காணப்பட்ட நொடிப்பு நிலையைக் கையாளும் தொழில் முறையாளர்கள் பெயர்கள் வகுப்பில் (ஒவ்வொரு வகுப்புக்கும் மூன்று பெயர்கள்) | பொருந்தாது |
| 14. | (a) பொருத்தமான படிவங்கள் மற்றும் (b) அதிகாரப்பூர்வ பிரதிநிதிகள் இருக்கும் விவரங்கள் | (a) https://ibbi.gov.in/home/downloads (b) பொருந்தாது |

தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் ஜெட் ஏர்வேஸ் (இந்தியா) லிமிட்டெட்-ன் கார்ப்பரேட் நொடிப்பு நிலை தீர்வுக்கான செயல்முறையைத் தொடங்குவதை 20 ஜூன் 2019 அன்று உத்தரவிட்டுள்ளது (உத்தரவின் நகல் கீழே கையொப்பமிட்டவரிடம் 21 ஜூன் 2019 அன்று கொடுக்கப்பட்டுள்ளது.)

ஜெட் ஏர்வேஸ் (இந்தியா) லிமிட்டெட்-ன் கடன் தந்தவர்கள் தங்களது கோரல்களை உரிய ஆதாரத்துடன் 04 ஜூலை 2019 அன்று அல்லது அதற்கு முன்னர் இடைக்கால தீர்வு காணும் தொழில்முறையாளருக்கு, நுழைவு எண். 10ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் சமர்ப்பிக்க இதன்மூலம் அழைக்கப்படுகிறார்கள்.

நிதி அளிக்கும் கடன் வழங்குநர்கள் தங்களின் கோரல்களை அதற்கான ஆதாரத்துடன் மின்னணு வழிமுறையினூடாக மட்டுமே சமர்ப்பிக்க முடியும். மற்ற எல்லா கடன் தந்தவர்களும் அதற்குரிய ஆதாரத்துடன் நேரிலோ, அஞ்சல் வழியிலோ அல்லது மின்னணு வழி முறை மூலமோ சமர்ப்பிக்கவும். மின்னணு முறைமூலம் அனுப்புவதற்காக பின்வரும் லிங்கை – http://jetairways.wcgt.in இந்த இணைப்பானது மாற்று வழியில் கூட பெறப்பட முடியும். http://jetairways.com/insolvencyproceedings.

வெளிநாட்டுப் பணத்தில் மதிப்பளிக்கப்படும் கோரல்கள் திவால் ஆரம்பத் தேதி அன்றுள்ளபடியான உத்தியோகப்பூர்வ நாணய மாற்று வீதத்தில் இந்தியப் பணமதிப்பில் மதிப்பிடப்படும்.

பொய்யான கோரல் அல்லது தவறாக இட்டுச் செல்லும் ஆதாரங்களை சமர்ப்பித்தல் தண்டத் தொகை கட்ட நேரிடும்.

ஒம்/-
ஆஷிஷ் சாவ்ச்சாரியா
இடைக்கால தீர்வுகாணும் தொழில்முறையாளர்

தேதி : 24 ஜூன் 2019
இடம் : மும்பை



**கவியரசு கண்ணதாசன்**

**93-வது பிறந்த நாள்**

நாள் : 24.6.2019 திங்கட்கிழமை
நேரம் : காலை 8.30 மணி
இடம் : கோபதி நாராயணா சாலை, தியாகராய நகர், சென்னை

தமிழ்நாடு அரசின் சார்பில்
**கவியரசு கண்ணதாசன்** அவர்களின்
திருவுருவச் சிலைக்கு
**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,**
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள்
மற்றும் சீர்மிகு பெருமக்கள்
மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

அனைவரும் வருக!

இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை - 600 009.

செ.ம.தொ.இ/634/வரைகலை/2019

**படிவம் G**

**விருப்ப வெளிப்பாட்டுக்கான அழைப்பு**

(திவால் மற்றும் நொடிப்புநிலை (பெருநிறுவனங்களின் திவாலுக்கான தீர்மான செயல்முறை) ஒழுங்குமுறைகள் 2016ன் ஒழுங்குமுறை 36A (1) ன் கீழ்)

| பொருத்தமான விவரங்கள் | | |
|---|---|---|
| 1. | பெருநிறுவன கடன்தாரர் | விக்டரி எலெக்ட்ரிகல்ஸ் லிமிட்டெட் |
| 2. | பெருநிறுவன கடன்தாரர் இணைவு தேதி | ஜூலை 27, 2000 |
| 3. | பெருநிறுவன கடன்தாரர் இணைவு / பதிவு உள்ள அதிகார மையம் | நிறுவனங்கள் சட்டம் / ROC, சென்னை |
| 4. | பெருநிறுவன அடையாள எண் / வரையறுக்கப்பட்ட கடன் பொறுப்புக்கான பெருநிறுவன அடையாள எண் | CIN: U31909TN2000PLC078301 |
| 5. | பெருநிறுவன கடன்தாரரின் பதிவு அலுவலகம் மற்றும் முதன்மை அலுவலகம் (ஏதேனும் இருப்பின்) அவற்றின் முகவரி | விக்டரி எலெக்ட்ரிகல்ஸ் லிமிட்டெட், எண். 850/64B, T H சாலை, ராயல் என்ஃபீல்டு அருகில், திருவொற்றியூர், சென்னை-600019 |
| 6. | பெருநிறுவன கடன்தாரரின் கலைப்பு ஆரம்ப தேதி | ஏப்ரல் 10, 2019 |
| 7. | விருப்ப வெளிப்பாட்டுக்கான அழைப்பு தேதி | ஜூன் 24, 2019 |
| 8. | சட்டம் 25(2)(h)-ன் கீழான தீர்மான விண்ணப்பதாரர்களின் தகுதி விவரங்கள் கிடைக்கப்பெறுவதற்கான வலைதளம் | irp.victory@gmail.com-க்கு மின்னஞ்சல் விடுத்து விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் |
| 9. | பிரிவு 29A-ன் கீழ் பொருந்தத்தக்க தகுதி விவரங்கள் கிடைக்கப்பெறுவதற்கான வலைதளம் | IBBI-ன் அலுவலக ரீதியான வலைதளத்தில் (ibbi.gov.in) இருக்கிறது அல்லது irp.victory@gmail.com க்கு மின்னஞ்சல் விடுத்து பெற்றுக்கொள்ளலாம். |
| 10. | விருப்ப வெளிப்பாடு பெறப்படுவதற்கான கடைசி தேதி | ஜூலை 09, 2019 |
| 11. | உத்தேச தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் | ஜூலை 19, 2019 |
| 12. | தற்காலிக பட்டியலுக்கான ஆட்சேபனைகள் சமர்ப்பிக்க கடைசி தேதி | ஜூலை 24, 2019 |
| 13. | உத்தேச தீர்மான விண்ணப்பதாரர்களின் இறுதி பட்டியல் | ஆகஸ்டு 03, 2019 |
| 14. | உத்தேச தீர்மான விண்ணப்பதாரர்களுக்கு தீர்மான திட்டங்களுக்கான வேண்டுகோள் மற்றும் எவேல்யூசன் மேட்ரிக்ஸ், தகவல் குறிப்பாணை ஆகியன வழங்குவதற்கான தேதி | ஜூலை 24, 2019 |
| 15. | தீர்மான திட்டம், எவேல்யூசன் மேட்ரிக்ஸ், தகவல் குறிப்பாணை மற்றும் மேற்கொண்ட தகவல் ஆகியவற்றை பெறுவதற்கான முறை | irp.victory@gmail.com-க்கு மின்னஞ்சல் விடுப்பதன் மூலம் விவரங்களைப் பெறலாம் |
| 16. | தீர்மான திட்டங்கள் சமர்ப்பிக் கடைசி தேதி | ஆகஸ்டு 03, 2019 |
| 17. | தீர்மான தொழில் முறையாளர்களுக்கு தீர்மான திட்டங்கள் சமர்ப்பிக்கும் முறை | தீர்மானத் திட்டம் மூடி முத்திரை இடப்பட்ட உறையில் வைத்து பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டும்: திரு. சின்னம் பூர்ண சந்திர ராவ், C/o GVR கார்ப்பரேட் சர்வீசஸ் பிரைவேட் லிமிட்டெட், H No 8-2-248/1/7/9 & 10/7, மனை எண். 9 & 10, 4வது தளம், 4A உமா சாம்பர்ஸ், நாகார்ஜூனா ஹில்ஸ், பஞ்சங்குட்டா, ஹைதராபாத்-500082 |
| 18. | தீர்மான திட்டத்தை தலைமை அதிகாரியிடம் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்ட தேதி | செப்டம்பர் 22, 2019 |
| 19. | தீர்மான தொழில்முறையாளர் பெயர் மற்றும் பதிவு எண். | திரு. சின்னம் பூர்ண சந்திர ராவ், பதிவு எண். IBBI/IPA-003/IP-N000119/2017-18/11298 |
| 20. | வாரியத்தில் பதிவு செய்யப்பட்டவாறான பெயர், முகவரி மற்றும் மின்னஞ்சல் | திரு. சின்னம் பூர்ண சந்திர ராவ், ஃபிளாட் எண். 101, TVS மஹதி அடுக்ககம், சம்பூர்ண சூப்பர் மார்க்கெட் எதிரில், SR Digi School பின்புறம், லான்கோ ஹில்ஸ் சாலை, மணிகோண்டா, ஹைதராபாத்-500089. Chinnam.poorna@gmail.com |
| 21. | தகவல் தொடர்புக்காக பயன்படுத்தப்பட வேண்டிய தீர்மான தொழில்முறையாளர் பெயர், முகவரி மற்றும் மின்னஞ்சல் | தீர்மானத் திட்டம் மூடி முத்திரை இடப்பட்ட உறையில் வைத்து பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டும்: திரு. சின்னம் பூர்ண சந்திர ராவ், C/o GVR கார்ப்பரேட் சர்வீசஸ் பிரைவேட் லிமிட்டெட், H No 8-2-248/1/7/9 & 10/7, மனை எண். 9 & 10, 4வது தளம், 4A உமா சாம்பர்ஸ், நாகார்ஜூனா ஹில்ஸ், பஞ்சங்குட்டா, ஹைதராபாத்-500082 Irp.victory@gmail.com |
| 22. | மேலும் விவரங்கள் கிடைக்கப்பெற | irp.victory@gmail.com-க்கு அஞ்சல் விடுத்து பெற்றுக்கொள்ளலாம். |
| 23. | படிவம் G பிரசுர தேதி | ஜூன் 24, 2019 |

ஒப்பம்/-
சின்னம் பூர்ண சந்திர ராவ்,
தீர்மான தொழில்முறையாளர்
விக்டரி எலெக்ட்ரிகல்ஸ் லிமிட்டெட் (CIRP-ன் கீழ்)
Reg.No. IBBI/IPA-003/IP-N000119/2017-18/11298
முகவரி: C/o GVR கார்ப்பரேட் சர்வீசஸ் பிரைவேட் லிமிட்டெட், H No 8-2-248/1/7/9 & 10/7, மனை எண். 9 & 10, 4வது தளம், 4A உமா சாம்பர்ஸ், நாகார்ஜூனா ஹில்ஸ், பஞ்சங்குட்டா, ஹைதராபாத்-500082

தேதி : ஜூன் 24, 2019
இடம் : ஹைதராபாத்